THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Monday, the 3rd March 1969

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Communist Party Conference conducted at Madurai

* 91 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether special police protection was provided for the Communist Party Conference conducted at Madurai;

(*b*) the expenditure incurred thereon;

(*c*) whether it was permitted to conduct the public meeting till 12 p.m.; and

(*d*) whether the other parties also will be permitted to conduct meetings till 11 p.m.?

மதுரையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) மதுரையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்கு விசேஷ போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டதா ?

(இ) அதற்கான செலவு எவ்வளவு ?

(உ) இரவு 12 மணி வரை பொதுக்கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டதா?

(எ) மற்ற கட்சிகளும் இரவு 11 மணி வரை கூட்டம் நடத்த அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) & (எ) ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, ஆளும் கட்சியின் கூட்டணித் தோழர்கள் தவிர மற்றவர்களுக்கு 11 மணி வரையில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டால் பல போலீஸ் ஸ்டேஷன்களில் மறுக்கப்படுகிறது. அப்படி கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லோருக்குமே 11 மணி வரையில் கூட்டம் நடத்த அனுமதிக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

[3rd March 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கட்சி வேறுபாடின்றி 11 மணி வரையில் கூட்டத்திற்கு அனுமதி அளிக்கலாம் என்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : அரசியல் அல்லாத மற்ற நிகழ்ச்சிகளுக்கு 11 மணி வரையில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஆங்காங்குள்ள காவல் துறை கண்காணிப்பாளர்களும் மற்ற காவல் துறையினரும் அவசியமான இடங்களில் தங்கள் விருப்பம்போல அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்று அனுமதி இருக்கிறது.

திரு. சா. கணேசன் : திருவிழாக்கள், இசைவிழாக்கள், தமிழ் விழாக்கள் ஆகியவை இரவு 12 மணி வரைவில், ஏன், காலை 4; 5 மணி வரையில்கூட நடைபெற இதுவரையில் காவல் துறையினர் அனுமதித்து வந்திருப்பது அரசுக்கு தெரியும் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தெரியும். அந்த நிலை விரியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக 10 மணி அளவில் அனுமதியைக் கீழே உள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வழங்குகிறார்கள். அதற்கு மேலே வேண்டுமென்றால் சூப்ரண்ட் ஆஃப் போலீஸ் வரையிலும் போக வேண்டியிருக்கிறது. அதை மாற்றி இப்போது 10 மணி வரையில் கொடுப்பவர்களே 11 மணி வரையிலும் அனுமதிக்க அதிகாரம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : இரவு நேரத்தில் பழைய காலத்தில் தெருக்கூத்துக்கள் காலை 5 மணி வரையில் நடக்கும். அப்படி நடைபெறும் பழைய முறைப்படி தெருக்கூத்துகளுக்கு சர்க்கார் அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்தக் கூத்தாக இருந்தாலும் ஒழுங்கான முறையில் நடைபெற்றால் காவல்துறை கண்காணிப்பாளர் தருகிற ஒப்புதல்பேரில் அனுமதி நிச்சயமாக வழங்கப்படும்.

Complaint against a Police Constable

* 92 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a Police Constable raped a girl recently at the Sirkazhi Police Station;

(*b*) whether a complaint was lodged in this regard; and

(*c*) if so, the action taken against the constable?